**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.54/2017**

| | |
|---|---|
| Name: பழனி | Caste: |
| Father's Name: வரதன்<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 09.04.2026 | |

**09.04.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 1.00 PM**

**பி.வா.சா.1. – குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு சொந்தமான ஆலமரத்து கழனிக்கு நான் தனிநபர் சொத்துக்கள் மூலமாக தான் தனிநபர் கழனி வழியாக தான் செல்வனே் என்றால் சரிதான் தனி நபர் வரப்பு வழியாக தான் சென்று வருகிறேன். வாதிகள் உட்பட தனி நபர்கள் யாரும் அதனை ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி ஆலமரத்து கழனிக்கு ரெட்டியார் காலனி வழியாக வாதிகள் செல்லுவதாக குறிப்பிட்டுள்ளனர் அந்த வழியை நான் பயன்படுத்தி வருகிறேனா என்றால் நான் ரெட்டியார் கழனியையும் பயன்படுத்தி வருகிறேன். நான் மேற்படி விவரத்தை என்னுடைய பதில் உரையிலோ அல்லது பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் அவ்வாறு எந்தவித குறிப்பிடுகளும் இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய தந்தை வரதனின் இறப்பு சான்றிதழை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. நான் ஆலமரத்து கழனி என குறிப்பிடுவது 1975 பட்டாவாகும். வாதிகள் 981 பட்டா நிலம் வழியாக சென்றால் எனக்கு ஆட்சேபணை

உள்ளதா என்றால் வரப்பு வழியாக சென்றால் ஆட்சேபணை இல்லை. வாதிகளும் நானும் பங்காளிகளாக இருப்பதால் விவசாய அறுவடை செய்தவற்றை ஒருவரது கழனி தாண்டி வண்டி பாதையில் கொண்டுபோவது வழக்கம் என்றால் சரிதான். என்னுடைய தகப்பானர் எப்போது இறந்தார் என்றால் 04.03.2012 ல் இறந்தார். என்னுடைய தகப்பனார் காலத்தில் இருந்து தற்போது வரை மேற்படி வழியாக தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் ராமாரெட்டியார் நிலத்தின் வழியாக தான் மேற்கு பக்கமாக பயன்படுத்தி வருகிறார்கள். நானும் வாதிகளும் ஒரே மூதாதையார்களை கொண்டவர்களாக உள்ளோம். அவ்வாறு உள்ள நிலையில் 3 ம் நபரான ரெட்டியார் நிலத்தின் வழியாக பயன்படுத்தி வருவதாக சொல்லுவது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவிணை ஆகாத சொத்தில் வழியை தடுப்பது சட்டப்படியாக தவறு என்றால் சரியல்ல. தாவாப்படி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 1.15 PM**

**Sd/–R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**